DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1 TIRUPPUR.
**CC No. 571/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of Witness for | | | Prosecution | : | PW-7 |
| | | | Defence | : | |
| Name | : | திருமதி.பதுருன்னிசா பேகம் | Court | : | JM-2 |
| Father's/ Husband's Name | : | | Occupation | : | ஆய்வாளர் |
| village | : | | Age | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in accordance with the provisions of act X of 1873 of the day of
**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை** **நாள் – 19.06.2025**

1. நான் தற்போது திருப்பூர் மாநகர குற்ற ஆவண காப்பகத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.09.2023 அன்று திருப்பூர் மாநகர மத்திய காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது தலைமை காவலர் யுவராஜ் என்பவர் பதிவு செய்த காவல் நிலைய குற்ற எண்.582/2023 ச.பிரிவுகள் 279,304(A) இதச வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். பின்னர் 04.09.2023 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாணிக்கம் மற்றும் சேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே சாட்சிகளான முத்துலட்சுமி, சூர்யபிரகாஷ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காலை 08.00 மணிக்கு திருப்புர் அரசு மருத்துவமனை சென்று பஞ்சாயத்தார் முன்னிலையில் இவ்வழக்கில் இறந்து போன தண்டியப்பன் என்பவரின் பிரேதத்தின் மீது விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் மேற்படி பிரேதத்தை தலைமை காவலர் 728 மூலம் பிணக்கூராய்வுக்கு அனுப்பி வைத்தேன்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTI1A0078562024/truecopy/order-6.pdf

மேற்படி காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான வாசிமாலை, பிச்சை, மாணிக்கம், வேலுமணி, ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரியை ஈஸ்வரன் வயது 42 த.பெ. சின்னபால்ராஜ் என்பவரை 10.30 மணிக்கு கைது செய்து 11.00 மணிக்கு பிணையில் விடுவித்தேன். பின்னர் 15.09.2023 அன்று விபத்துக்குண்டான TN 63 H 3378 மற்றும் அதனுடைய டிரெய்லர் TN 51 A 7008 வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்துடன் ஆஜர் படுத்தினேன். பின்னர் 15.11.2023 அன்று தெற்கு வட்டார போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் முன்பு மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கான ஆய்வறிக்கை பெற்றேன். **மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணமானது சட்டப்பிரிவு 294(3) குவிமுச வின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு எதிர் தரப்பு வழக்கறிஞரால் அதன் ஆவணத்தின் உண்மை தன்மை ஒப்புக் கொள்ளப்பட்டு ஆட்சேபணையின்றி குறியீடு செய்யப்படுகிறது. இறந்து போன தண்டியப்பனின் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சிவக்குமாரை விசாரணை செய்து இறப்பிற்கான காரணத்தை அறிக்கை பெற்றேன். அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணமானது சட்டப்பிரிவு 294(3) குவிமுச வின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு எதிர் தரப்பு வழக்கறிஞரால் அதன் ஆவணத்தின் உண்மை தன்மை ஒப்புக் கொள்ளப்பட்டு ஆட்சேபணையின்றி குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் யுவராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 279, 304(A) இதச விலிருந்து 279,304(A) மற்றும் 123, 177 மோட்டார் வாகன சட்டம் மாற்றம் செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி ஈஸ்வரன் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTI1A0078562024/truecopy/order-6.pdf

www.ecourtsindia.com

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

புகார்தாரரிடமிருந்து புகாரை பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

NADIA FATHIMA Digitally signed by NADIA FATHIMA Date: 2025.06.19 19:06:09 +0530

Judicial Magistrate No.II,
Tiruppur.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTI1A0078562024/truecopy/order-6.pdf